நல்லூர் ... மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 214 ஆங்கீரச ஆனி 14 ( 28 . 06 . 1992 ) ஞாயிறு


## தகவல் வழங்கிய இருவர் மக்கள் முன்பு அம்பலம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக எதிரிக்குத் தகவல் கொடுத்து மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்ட இருவர் நேற்று மாலை 3 மணியளவில் அச்சுவேலிப் பகுதியில் பல இடங்களில் மக்கள் முன் அம்பலப்படுத்தப்பட்டனர் பெரும் திரளான மக்கள் இவர்களைப் பார்வை யிட்டதுடன் அவர்கள் மீது ஆத்திரம் கொண்டதை யும் அவதானிக்க முடிந்தது. 20

# பாதுகாப்பு வலயம் நீக்கப்படமாட்டா

# ஆஸ்பத்திரி தொடர்ந்தும் இயங்கும்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம் நகரில் உள்ள பாதுகாப்பு வலயம் மூடப்பட்டதாக வெளியான வதந்திகளில் உண்மையில்லை எனவும் யாழ். போதனா வைத்திய சாலை தொடர்ந்து இயங்கும் எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைப் பிரதிநிதி ஜோண் ஜோஸ்வா தெரிவித்துள்ளார்

குடாநாட்டில் நேற்று இது தொடர்பாக வெளியானவதந்திகளையும் அவர் மறுத்துள்ளார்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் வரை போதனா வைத்தியசாலைஅமைந்துள்ள பாதுகாப்பு வலயம் தொடர்ந்தும் பேணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைக்குழு அலுவலகத்தையோ, பாதுகாப்பு வலயத்தையோ மூடிவிடுமாறு எதுவித அறிவித்தல்களும் தமக்கு உத்தியோக பூர்வமாக கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்ட அவர் பாதுகாப்பு வலயத்தை நீக்கும் எண்ணம் இல்லை என்றும் சொன்னார் 47. 07

## யாழ். ஆஸ்பத்திரி நேற்று வழமைபோல இயங்கியது

யாழ் பெரியாஸ்பத்திரி நேற்று வழமைபோல இயங்கியது

வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்கள் வைத்திய சிகிச்சை பெற்றதைக்காண முடிந்தது

இதேபோல வார்டுகளிலும் நோயாளர் அனுமதிக்கப்பட்டனர்

ஆஸ்பத்திரி ஊழியர்களும் எதுவித தடையுமின்றி தமது கடமைகளுக்குச் சமூகமளித்தனர் 07

## யாழ். நகர் வழமைபோல நேற்று காணப்பட்டது

யாழ். நகரப்பகுதி நேற்று வழமைபோல இயங்கியது வர்த்தக நிலையங்கள், உணவுக்கடைகள் என்பன திறந்து காணப்பட்டன.

ப.நோ. கூ. சங்க கிளைகளும் திறந்து மக்களுக்கு உணவுப்பொருள்களை விற்பனை செய்தது.

அத்துடன் மக்களின் நடமாட்டமும் வழமைபோல காணப்பட்டன. மினிபஸ் சேவைகளும் வழமைபோல நடைபெற்றன.

## பாதுகாப்பு வலயத்தினுள் அச்சமின்றி நடமாடலாம்

யாழ். நகரப்பாதுகாப்பு வலயத்தினுள் எவ்வித இராணுவத்தாக்குதல்களும் இடம்பெறமுடியாது என சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்கள் அச்சமின்றி பாதுகாப்பு வலயத்தினுள் நடமாடமுடியும் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச செஞ்சிலுவை வாகனம் பாதுகாப்பு வலயப் பகுதியில் அடிக்கடி ரோந்து சுற்றுவதையும் காணமுடிகிறது.

## பதுக்கலில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை

குடாநாட்டில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு எதுவித தட்டுப்பாடும் இல்லை என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் மூன்று மாதங்களுக்குரிய பொருள்கள் இருப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில வர்த்தகர்கள் பதுக்கலில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பதுக்கிய மண்ணெண்ணெய் கல்வியங்காட்டில் மீட்பு

யாழ்ப்பாணத்தில் வியாபாரி ஒருவரால் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் மண்ணெண்ணெயை மீட்டெடுப்பதற்கு தமிழீழ காவல்துறையினர் மிக விழிப்புடன் செயற்படுவதைக் காணமுடிந்தது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கல்வியங்காட்டுப் பகுதியில் பதுக்கிவைக்கப்பட்ட ஆறு பரல்கள் மண்ணெண்ணெயை காவல் துறையினர் மீட்டெடுத்ததாகத் தெரிவிக்

...04ஆம் பக்கம் பார்க்க

## ஊரடங்கு நீக்கமும் அமுலும்

நேற்றுக்காலை 6 மணிக்கு யாழ். மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை 10 மணிக்கு நீக்கப்பட்டு பின்னர் நேற்றுமாலை 6 மணி முதல் மீண்டும் அமுல் செய்யப்படுவதாக கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

## கொம்படிப்பாதை வழமை போல

நேற்று மாலை முத்திரைச் சந்தையிலிருந்து யாழ்ப்பாணப்பகுதிப் பயணிகள் கொழும்பு நோக்கிச்சென்றனர்

கொழும்புப்பயணிகளை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் பல சென்றன

கொம்படி, ஊரியான் பகுதியிலால் கொழும்புப் பயணிகள் வந்தபடியிருந்தனர். மற்றும் வாகனங்களும் குடாப் பகுதிக்கு வந்தன 07

## குடாநாட்டின் பகுதிகள் வழமைபோலநடைபெற்றன

ஊரடங்குச்சட்டம் அமுல் என அறிவிக்கப்பட்டும் நேற்று குடாநாட்டின் பல பகுதிகள் வழமைபோலக் காணப்பட்டன.

வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் பகுதிகளில் சந்தைகள், வர்த்தக நிலையங்கள் வழமைபோல நடைபெற்றதைக் காணமுடிந்தது.

சில ஆலயங்களிலும் திருவிழாக்கள் நடைபெற்றன. ரியூட்டரிகளிலும் மாணவர்கள் காணப்பட்டனர். 47.07

## அரசாங்க அதிபரும் கொழும்புடன் தொடர்பு

யாழ். மாவட்டத்தில் அமுலான ஊரடங்குச் சட்டத்தால் எழுந்துள்ள நிலைமைகளால் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் மூலம் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டார்.

யாழ் மாவட்டத்தில் எவ்வித புதிய அறிவித்தல்களும் விடுக்கப்படவில்லை எனவும் அது குறித்து தமக்கு எதுவும் தெரியாது எனவும் அரச அதிபருக்கு கொழும்பில் இருந்து தெரிவிக்கப்பட்டதாம். 47. 07

## சீமெந்து ஊழியருக்கு நாளை சம்பளம்

லங்கா சீமெந்து லிமிடெட் ஊழியர்களின் ஜூன் மாத சம்பளக் கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை கன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## நாளைய கண்டனப் பேரணியில் கலந்து கொள்ள அழைப்பு

1990 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையையும், 1991 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையையும் வெவ்வேறாகக் கணித்து பல்கலைக்கழக அனுமதிக்கு உயர் கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதைக் கண்டித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப்பேரணி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகும்

இந்த ஆர்ப்பாட்டம் பேர

—04 ஆம் பக்கம் பார்க்க

★ மண்ணெண்ணெய் பதுக்கல்

## ஆனைக்கோட்டையிலும் 15 பரல்கள் மீட்கப்பட்டன

நேற்றுப்பகல் ஆனைக்கோட்டையிலும் மாலை குருநகர்ப் பகுதியிலும் பொதுமக்கள் கொடுத்த புகார்களைத் தொடர்ந்து மண்ணெண்ணெய் பரல்களைக் காவல் துறையினர் கைப்பற்றினர்.

ஆனைக்கோட்டையில் வியாபாரி ஒருவர் வீட்டில் பதுக்கி வைத்திருந்த 15 பரல் மண்ணெண்ணெய் பறிமுதல் செய்யப்பட்டது.

ஆனைக்கோட்டையில் 15 பரல்களும், யாழ்ப்பாணம் அடைகலமாதா கோவிலில் 5 பரல்களும். குருநகர் சந்தைப் பகுதியில் 5 பரல்களும் 1லீற்றர் விதம் நியாய விலைப்படி மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

மாலை நேரம் குருநகர் கடை ஒன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 4½ பரல் மண்ணெண்ணெய் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டது.

இரவுநேரம் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலும் காவல்துறையினர் மண்ணெண்ணெய் பதுக்கி வைத்திருக்கும் வீடுகளைச் சோதனை போடுவதில் முன் நின்றதைக் காண முடிந்தது. (07)

## அச்சுவேலிக்கு அண்மையில் படையினர்-புலிகள் மோதல்

அச்சுவேலிக்கு அண்மையில் நேற்றுமுன்தினமிரவு விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் முன்னேற முயன்றபோது மோதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது .(4707)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1992 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரை ஏன்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவிகள்

1. புவியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
2. மொழியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
3. தமிழில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
4. கர்நாடக வாய்ப்பாட்டு / வீணை / வயலின் போதனாசிரியர் தரம் 111

சம்பள அளவுத் திட்டம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1: ரூபா 9 600 - 8X 250 - 11, 600/ - (மாதமொன்றுக்கு)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 ரூபா 8, 000- 5X 250 - 9, 250/ -(மாதமொன்றுக்கு)
உதவி விரிவுரையாளர் : (தகுதிகாண்)
ரூபா 3, 900/ - மாதமொன்றுக்கு (நிலையானது)
ஆண்டு ஒன்றுக்கு
போதனாசிரியர்: ரூபா 3, 000/ - (மாதமொன்றுக்கு)

(துறைத் தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவை திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் அவரை ரூபா 4, 500/— 10X200- 6, 500/— (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்.)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாயகம் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் இடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற விரும்புவர்கள் 23X10 சதமீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு ரூபா 2/— முத்திரை ஒட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும்/ அவரது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
1992 06 25

06067

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1992 ஆகஸ்ட் 17ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்

பதவிகள்

1. தாவரவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
2. இரசாயனவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
3. பௌதிகவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
4. விலங்கியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
5. கணிதமும், புள்ளிவிபரவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

சம்பள அளவுத் திட்டம்
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 ரூபா 9 600— 8× 250— 11, 600/— (மாதமொன்றுக்கு)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 ரூபா 8, 000— 5×250 = 9, 250/- (மாதமொன்றுக்கு)
உதவி விரிவுரையாளர்: (தகுதிகாண்) ரூபா 3, 900/- மாதமொன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு (நிலையானது)

துறைத் தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் அவரை ரூபா 4. 500/ 10X 200 — 6, 500- (மாதமொன்றுக்கு. சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாயகம் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் இடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23X10 சதமீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பெற்ற பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள். அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும்/ அவரது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

பதிவாளர்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
1992. 06. 26.

06066

---

## சிறுவிளம்பரம்

### நீமியா உரம்

நெற்பயிருக்குச் சிறந்த அடிக்கட்டு உரம் நீமியா உரம் அனைத்துப் பயிருக்கும் உகந்தது பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்புத் தருவது நீமியா உரம் கூடிய விளைச்சலைத் தருவது நீமியா உரம். கிலோ ரூ 15/- 20 கிலோ ரூ. 260/- அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது.
-மிக்கிவைற் 06055

---

## ராவுக்கு 72 வயது

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இன்று தனது 72 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார்.

---

## வரலாறு காணாத அ. தி. மு. க. ஊர்வலம்

இன்றும், நாளையும் மதுரையில் நடைபெறவுள்ள அ. தி. மு. க. ஊர்வலத்தையும், மாநாட்டையும் வரலாறு காணாத அளவுக்குப் பிரமாண்டமான அளவில் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இது சம்பந்தமாக முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் இம் மகாநாட்டுக்கு மக்கள் குடும்பம் குடும்பமாக வந்து கலந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுள்ளார்.

## ★ கருணாநிதி குற்றச்சாட்டு மதுரை மகாநாட்டுக்கு அரச பணம் செலவழிப்பு!

மதுரை ரேஸ்கோஸ் மைதானத்தில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ள அ. தி. மு. க வெற்றி மாநாட்டிற்கு அரச பணம் பெருமளவில் செலவிடப்படுவதாக தி. மு. க தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்

மகாநாட்டை யொட்டி மதுரை நகரில் 10 ராட்சத பலூன்களில் புரட்சித் தலைவி உருவப் படம் வரையப்பட்டு 'வீர வரலாறு வெற்றி மகாநாடு' என எழுதப்பட்டுள்ளது.

அலங்கார வளைவுகளும் அங்கு வீதிக்கு வீதி பெரும் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

---

## மூத்த விநாயகர் உற்சவம்

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள அருள் மிகு மூத்த விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் ஆறாம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

### யுவானியர் உற்சவம்

யாழ் கண்டுக்குளி புனித யுவானியர் தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த 24 ஆம் திகதி காலை யாழ் ஆயரின் கூட்டுத் திருப்பலியுடன் நிறைவேறியது திருச்சொரூப பவனியும் இடம் பெற்றது

## தேர்த் திருப்பணி

நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்பாள் கோயிலின் தேர்த்திருப்பணிவேலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நிதி உதவி செய்ய விரும்புபவர்கள் ஆலய தர்மகர்த்தாவுடனும் திருப்பணி குழுவுடனும் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
44

---


# மரம் நடுவோம்

### யாழ் குடாநாட்டில்

விறகுக்காக பெருமளவு மரங்கள் வெட்டப்படுகின்றன.
இதனால் யாழ் குடாநாட்டில் சூழல் பாதிக்கப்படுகின்றது.
இது எமது மண்ணுக்கும் மக்களுக்கும் ஏற்படுகின்ற பாதிப்பாகும்
ஆகவே, நாம், ஆளுக்கொரு மரம் வைத்து பாதுகாக்க
திடசங்கற்பம் கொள்வோம்:

மரநடுகையை ஊக்குவிக்குமுகமாக,

மரக்கன்றுகளை வைத்துப்பராமரிக்க பொலிதீன் பக்கட்டுக்கள் தேவைப்படுகிறது.
வீடுகளில், பொது இடங்களில் பயன்படுத்தும் பால்மா பக்கட்டுகளை எங்களிடம் ஒப்படைத்து, பக்கட்டுக்கு ரூபா ஒன்றை (1/-) எமது காரியாலயங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (T. R. O)

காரியாலயங்கள்: அளவெட்டி, கொக்குவில், பருத்தித்துறை, நாகர்கோயில் சாவகச்சேரி, பளை, கெற்பேலி

06065

# ஒவ்வொரு பாடசாலையிலும் அபிவிருத்தி நிதியம்

நாட்டில் உள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும் பாடசாலை அபிவிருத்தி நிதியம் அமைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி நிதியிலிருந்து வழங்கப்படும் ஆயிரம் ரூபா ஆரம்பத் தொகையுடன் இந்த நிதியம் அமைக்கப்படும்.

பாராளுமன்றத்தில் இதற்கான சட்டமூலம் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

ஒரு பாடசாலையின் அபிவிருத்தி வேலைகளுக்கு இந்த நிதியில் இருந்து செலவிடப்படும்.

பாடசாலை நிதியில் இடம்பெறும் மோசடிகளைத் தவிர்க்கவே இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டதாக கல்வியமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ★ வேட்புமனு நேற்று இறுதி நாள்

# இந்திய ஜனாதிபதி தேர்தல் நான்கு பேரே போட்டி

இந்திய ஜனாதிபதி தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் செய்தவர்கள் தமது மனுக்களை வாபஸ் பெறும் தினம் நேற்றுடன் முடிவடைந்து விட்டது.

இத்தேர்தலில் போட்டியிட நான்கு பேர் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்திரா காங்கிரஸ் சார்பில் தற்போதைய உப ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, தேசிய முன்னணி, பாரதீய ஜனதா ஆதரவுடன் சுயேட்சையாக போட்டியிடும் பேராசிரியர் ஜி.ஜி. சுவெல் ஆகியோருக்கிடையே கடும் போட்டி நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பிரபல வழக்கறிஞர் ராம் ஜெட்மலானி, ஜமிந்தர் சிங் ஆகியோர்களும் சுயேட்சையாகப் போட்டியிடுகின்றனர்.

இந்திய ஜனாதிபதி தேர்தல் அடுத்தமாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# இந்திய ஜனாதிபதித் தேர்தல் சில அரசியல் கட்சிகள் வி. பி. சிங் மீது கண்டனம்

இந்திய தேர்தலில் வி. பி. சிங்கும் ஜனதா தள் கட்சியும் நடந்துகொள்ளும் விதம் குறித்து ஒன்பது அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

புதுடில்லியில் நேற்று இந்த ஒன்பது தலைவர்களும் அறிக்கை ஒன்றை விடுத்தனர்.

வி. பி. சிங் இத்தேர்தலில் சாதிப்பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

## மன்னாரில் தமிழர் கடத்தல்

மன்னார் நகர்ப்பகுதியில் தமிழர்கள் காணாமல் போவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்குள்ள முகாம்களிலும் தமிழர்கள் கடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பதுக்கிய...

...க்கப்படுகிறது.

மீட்டெடுத்த மண்ணெண்ணெயை பல இடங்களில் மக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விநியோகித்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (47)

# வதந்திகளை நம்பாதீர்கள்

# அரசியல் பிரிவு வேண்டுகோள்

சிறிலங்கா இனவாத அரசும், இராணுவமும் எம் மக்கள் மீது அக்கறை கொண்டதுபோல் தனது வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் பொய்யான செய்திகளை விடுத்தும், வதந்திகளைப் பரப்பியும் மக்களைத் தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர வைத்துப் பொது இடங்களில் கடைச் செய்து இலகுவாகக் கொன்றொழிப்பதற்குத் திட்டம் போடுகின்றது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொன்றொழிப்பதன் மூலம் எமது தேசியப் படையணியின் பலத்தைச் சிதறடிக்கலாம் என நினைக்கிறது.

கட்டைக்காட்டில் தனது இராணுவத் தளபாடங்களையும், படையணியையும் இறக்கிப் பாரிய படையெடுப்பை நடத்தத் திட்டமிட்டுள்ள எதிரி இவ்வகையான பொய் வதந்திகளைப் பரப்பித்தனது இலக்கை இலகுவாக்க முயல்கிறான். எமது தமிழீழப் பரப்பைத் துண்டாட நினைக்கின்றான்.

மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் வடமராட்சியில் 'ஒபரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயரும்படி வானொலி மூலம் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அறிவித்துவிட்டுக் குறிப்பிட்ட கோயில்கள், பாடசாலைகள் மீது விமானத் தாக்குதலும் எறிகணைத் தாக்குதலும் மேற்கொண்டமை எம்மனதிலிருந்து விட்டு அகலவில்லை.

அண்மையில் தெல்லிப்பழையில் நடந்த சண்டையின் போது கோயில்களில் மக்களைக் கூடும்படி அறிவித்துவிட்டுத் துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீது கோரக் குண்டு வீசிப் பொதுமக்களைக் கொன்றொழித்த வடு இன்னும் ஆறவில்லை.

எனவே எம்மினிய மக்களே! எதிரியின் இவ்வகையான வதந்திகளை அறிவித்தல்களைக் கேட்டு ஏமாறாதீர்கள் அல்லலுற்று அலையாதீர்கள் எதிரியின் சதித்தனத்திற்குப் பலியாகாதீர்கள் எமது இருப்பிடங்களை விட்டு ஓடுவதில் எவ்விதப் பயனுமில்லை.

யாழ் குடாநாட்டைவிட்டே எதிரி எம்மை இடம் பெயரும்படி அறிவித்தால் எம்மால் இடம்பெயர முடியுமா? இடம் பெயர்ந்து நாம் எங்கு செல்வது?

எனவே எமது பாதுகாப்பை நாமே உறுதிசெய்து கொண்டு எதிரியின் படையெடுப்பை ஒன்று சேர்ந்து முறியடிப்போம் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடிக்கடி ஹெலி நடமாட்டம்

பலாலி இராணுவ முகாமிற்கும் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதிக்கும் ஹெலிகப்டர்கள் நடமாட்டம் நேற்று அதிகரித்து காணப்பட்டது.

இதனைவிட பலாலி இராணுவ முகாமிற்கு அடிக்கடி விமானங்கள் வந்து இறங்கி சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே போல தீவுப்பகுதி, கரையோரப் பகுதிகளிலும் ஹெலிகப்டர்கள் அடிக்கடி சென்றதைக் காணமுடிந்தது. 47

## ஷெல் தாக்கு

நேற்று முன்தினம் இரவும் இராணுவத்தினர் தெல்லிப்பழை பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வெற்றிலைக்கேணி கட்டைக்காடும் பகுதியில் இருந்தும் இராணுவத்தினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது (47)

நாளைய...

...ணியில் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல மாணவர்களையும் அதிபர்களையும், ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் பல்கலைக்கழக மாணவர் சங்கமும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## ★ காணாமல் போனவர்கள் பற்றி

# ஜனாதிபதி ஆணைக்குழு யாழ் செயலகத்திலும் விசாரிக்கும்

காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு யாழ்ப்பாண செயலகத்திலும் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்த ஆணைக்குழு அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், அம்பாந்தோட்டைப்பகுதி செயலகங்களிலும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்னர் கடத்தப்பட்ட நபர்கள் குறித்த முறைப்பாடுகளை இந்த ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும்.

## அலங்கார உற்சவம்

கல்வியங்காடு அருள்மிகு இலங்கை நாயகி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.


# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்,

## முக்கிய அறிவித்தல்.

01. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் முதலுதவி, உதவித் தாதியர், ஆரம்ப சுகாதார சேவை, சுயதொழில் முயற்சி, தையல் பயிற்சி போன்ற சகல துறைகளிலும் பயிற்றப்பட்ட, பயிற்றப்படுகின்றவர்கள் தொண்டர்கள், அங்கத்தவர்கள் அனைவரும் இன்று 28.06.92 மாலை 3.00 மணிக்கு அவ்வப் பிரிவு செஞ்சிலுவைப் பணிமனைக்கு வருகை தரும்படி வேண்டப்படுகின்றனர்.

02. சகல பிரிவுச் செஞ்சிலுவைச் செயற்குழுக்களும் தமது பணிமனைக்கு வருகை தரும் மேற்படி பயிற்சியாளர்கள், தொண்டர்கள், அங்கத்தவர்கள் உதவியுடன் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பது என்பதையிட்டுக் கலந்தாலோசித்துத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுக்கும் வண்ணம் வேண்டுகின்றேன்.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,

ச, சிவானந்தராசா

கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
27 - 06 - 1992.

06069



# எமது அஞ்சலி

## பேராசிரியர் நவரட்ணம் சரவணபவானந்தன்

**MBBS (Cey) MRCP (UK) FRCP (EDIN) DMJ (LOND)**

(18. 04. 1935 - 23. 06. 1992)

யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் சட்ட மருத்துவ துறைத் தலைவர் பேராசிரியர் ந. சரவணபவானந்தன் அவர்களின் திடீர் மறைவு எமமைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இது எமக்கு ஈடு இணையற்ற இழப்பாகும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மருத்துவ பீட ஆசிரியர்,
ஊழியர், மாணவர்.

06063


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறெற் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 28-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது